අධ්‍යාපන, උසස් අධ්‍යාපන සහ වෘත්තීය අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சு
Ministry of Education, Higher Education and Vocational Education

'ඉසුරුපාය', බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව.
'இசுருபாய', பத்தரமுல்ல, இலங்கை.
'Isurupaya', Battaramulla, Sri Lanka.
+94112785141-50 | +94112785818
info@moe.gov.lk | www.moe.gov.lk

මගේ යොමුව / எனது இல. / My Ref. ED/04/59/08/01/01 — ඔබේ යොමුව / உமது இல. / Your Ref. — දිනය / திகதி / Date 2025.06.08

***அனைத்து மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள்,***
***அனைத்து வலயக் கல்விப் பணிப்பாளர்கள்ம்***
***அனைத்து பீடாதிபதிகள்,***
***அனைத்து ஆசிரியர் கல்லூரி அதிபர்கள்,***
***அனைத்து ஆசிரியர் நிலைய முகாமையாளர்கள்,***

***<u>இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவையின் வருடாந்த இடமாற்றம் - 2025</u>***

2025ம் ஆண்டிற்குரிய வருடாந்த இடமாற்றங்கள் 2025 ஜூலை மாதம் 01ம் திகதி முதல் செயற்படும் வகையில் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன், இதற்குரியதாக இடமாற்றங்களைப் பெற்ற உத்தியோகத்தர்களை இது தொடர்பில் அறியப்படுத்தி அவர்கள் புதிய சேவை நிலையங்களில் உரிய திகதியில் கடமைகளைப் பொறுப்பேற்கக் கூடிய வகையில் குறித்த உத்தியோகத்தர்களை தங்களது நிறுவனத்திலிருந்து விடுப்பதற்கும் அவர்களுக்குப் பதிலாக வருகை தரும் உத்தியோகத்தர்கள் தமது புதிய சேவை நிலையங்களில் கடமைகளைப் பொறுப்பேற்க கூடிய வகையிலும் செயற்படுமாறு தயவுடன் அறியத் தருகின்றேன்.

02. இவ் இடமாற்றங்கள் யாவும் 2024.08.20ம் திகதியுடைய கல்வி அமைச்சின் சுற்றுநிருப இலக்கம் 27/2024 இல் குறிப்பிடப்பட்டுள்ள வருடாந்த இடமாற்ற நடைமுறைகளுக்கு அமைவாகவே மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், தமது இடமாற்றக் கோரிக்கைகள் தொடர்பில் வருடாந்த இடமாற்ற சபையினரால் கவனத்தில் கொள்ளப்படவில்லை எனின் மாத்திரம் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் 2310/29 இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட நடைமுறை ஒழுங்கு விதிகளின் XVIII ம் அத்தியாயத்தின் 256வது உறுப்புரையின் விதிமுறைகளுக்கு அமைவாக உரிய உத்தியோகத்தர்கள் மேன்முறையீடுகளை சமர்ப்பிக்க முடியும்.

03. மாதிரி மேன்முறையீட்டு விண்ணப்பப் படிவமொன்று இத்துடன் இணைக்கப்பட்டுள்ளதுடன், மாதிரிப் படிவத்திற்கமைய தயாரிக்கப்பட்ட மேன்முறையீட்டு விண்ணப்பப் படிவங்களை 2025 ஜூன் மாதம் 25ம் திகதிக்கு முன்னர் எனக்கு அனுப்பிவைக்குமாறு தயவுடன் தெரிவித்துக் கொள்கின்றேன். குறித்த மேன்முறையீட்டு விண்ணப்பப் படிவத்தின் ஸ்கேன் (Scan Copy) செய்யப்பட்ட பிரதியொன்றை sltesrecruitemant@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்க வேண்டும் என்பதுடன், 2025 ஜூன் மாதம் 25ம் திகதிக்குப் பின்னர் கிடைக்கப் பெறும் மேன்முறையீடுகள் கருத்தில் கொள்ளப்படமாட்டாது என்பதையும் குறித்த உத்தியோகத்தர்களுக்கு அறுவுறுத்த வேண்டும்.

ஒப்பமிட்டவர் – நாலக களுவெவ
செயலாளர்

எஸ்.டப் சித்ரா ரோஹிணி
சிரேஷ்ட உதவிச் செயலாளர் (ஆசிரியர் கல்வியியலாளர்)